**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>**

**<u>நாள். 06.08.2025</u>**

**<u>O.S. 283/2017</u>**

**<u>வா.சா. 1</u> – குமாரசாமி**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>.**

குத்தகை ஆவணம் எனக்கு 2ம் பிரதிவாதி எழுதி தரவில்லை என்றால் சரிதான். குத்தகை ஆவணம் எழுதி தரவேண்டி ஏதாவது கோரிக்கை வைத்தேனா என்றால் அரசு அவ்வாறு எழுதிக்கொடுப்பதில்லை. குத்தகைக்கோ ஏலத்திற்கோ விடப்பட்ட சொத்தை சொத்து சம்மந்தமான ஒப்புதல் கமிஷ்னரிடமோ, துணை கமிஷ்னரிடமோ பெற வேண்டும் என்றால் சரிதான் 50 ஆயிரத்திற்கு மேல் இருந்தால் பெற வேண்டும். குத்தகை சம்மந்தமாக ஏதேனும் 2ம் பிரதிவாதியால் பேப்பரில் பரிசியம் போடப்பட்டதா என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் அறிவிப்பு ஒட்டப்பட்டது. 2014 ம் வருடம் அவ்வாறு அறிவிப்பு ஒட்டப்பட்டது அதை பார்த்து தான் நான் எலத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். மேற்படி ஒட்டப்பட்ட அறிவிப்பில் பழைய சர்வே எண் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. ஏலத்திற்கான பதிவேட்டின் படி ஏலம் குறிக்கப்பட்டதா என்றால் பதிவேடு பற்றி எனக்கு தெரியாது.

இந்த வழக்கின் வழக்கு பட்டிகை சொத்தை ரீசர்வே எண். 74/9, 15 ஏருக்கான தற்போது கன்னியாகுமரி முன்பு வடசேரியில் இருந்தது சொத்து குறித்து ஏற்கனவே அசல் வழக்கு எண். 135/2015 நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண். 135/2015 எண்ணில் ராமசாமி 1ம் பிரதிவாதியாகவும் எக்ஸிகூட்டி அலுவலர் 2ம்

பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான். **மேற்படி அசல் வழக்கு எண். 135/2015 ன் தீர்ப்பாணை வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அசல் வழக்கு எண். 135/2015 தீர்ப்புரை வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஏலத்திற்கான சான்றிடப்பட்ட நகல் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அசல் வழக்கு எண். 135/2015 ல் ஏலத்திற்கான பதிவேட்டை தாக்கல் செய்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. ஏலத்திற்கான உறுதி செய்யப்பட்ட ரசீது தான் தருவார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 135/2015 ல் 23.12.2014 ல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட பட்டா, பாட்ட ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி ரசீதை தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். அசல் வழக்கு எண். 135/2015 ல் 23.12.2014 ல் வா.சா.ஆ.2 ஆக டெப்பாசிட் ரசீது தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 யை தற்போது இந்த வழக்கில் அதன் நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

அசல் வழக்கு எண். 135/2015 ல் 23.12.2014 ல் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தின் சர்வே எண், எல்கைகள் அனைத்தும் திருத்தப்பட்டு தாக்கல் செய்ததாக தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு தமிழ் தெரியும் தீர்ப்பு படித்துப்பார்த்துள்ளேன். இந்த வழக்கின் வா.சா.ஆ.7 மேற்படி அசல் வழக்கு எண். 135/2015 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் நியாபகம் இல்லை. அசல் வழக்கு எண். 135/2015 ல் 23.12.2014 ல் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தின் சர்வே எண், எல்கைகள் அனைத்தும் திருத்தப்பட்டு தாக்கல் செய்ததாக தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டதால் மேற்படி வா.சா.ஆ.1 மற்றும் 2 சான்றிட்ட நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 135/2015 ல் இந்த வழக்கின் 1

ம் பிரதிவாதியை கட்சி சேர்க்கவேண்டி மனு செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் 1ம் பிரதிவாதியை அவ்வாறு சேர்க்க முடியாது நானும் என் முன் ஜன்மியும் விளம்புகை பரிகாரம் கோராத காரத்தால் என்று கூறி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி மனுவின் உத்தரவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம்.

எனது முன்ஜன்மி விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கு எண். 135/2015 ல் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியோடு சேர்ந்து விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 2014 முதல் தற்போது வரை நான் ஏதேனும் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள சர்வே எண். 71/8, 74/9 மொத்தம் 87 சென்றுக்கான 2014 பட்டா களியங்காடு ஊர்வகை நாராயணபிள்ளை பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. களியங்காடு ஊர்வகை நாராயணபிள்ளை 2ம் பிரதிவாதிக்கு proceedings அல்லது ஆவணத்தின் படியோ கொடுத்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. 87 சென்ட்றுக்கு பாட்டம் 3 ½ கோட்டம் என்றால் சரிதான். 2014 முதல் தற்போது வரை வழக்கு பட்டிகை சொத்தின் கணக்கு வழக்கு வைக்கவில்லை என்றால் சரிதான் தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

Cultivating tenancy Act ன் படி பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஓகி புயலில் வாழை வைத்தது அழிந்ததால் தகவல் அளித்ததின்படி மனு கொடுக்கப்பட்டது அதற்கான ரசீது இல்லை என்றால் சரிதான். மேற்படி கூறிய சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.74/9 நான்கு பக்கமும் காம்பவுண்டு சுவர் உள்ளது என்றால் சரிதான். நான்

தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 74/9 இரண்டு பிளாட்டாக உள்ளது என்ற குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**